# நோன்புப் பெருநாளின் சட்டங்கள்

جمعية الدعوة والإرشاد
وتوعية الجاليات بالخبر

தொகுப்பு
அல்கோபார் அழைப்பகம், தமிழ்ப் பிரிவு

# நோன்புப் பெருநாளின் சட்டங்கள்

1

## பெருநாள் தொழுகைக்கு முன் கொடுக்க வேண்டும்

மக்கள் பெருநாள் தொழுகைக்குப் புறப்படுவதற்கு முன்பே நோன்புப் பெருநாள் தர்மம் வழங்கப்பட வேண்டும் என அல்லாஹ்வின் தூதர் (ﷺ) அவர்கள் கட்டளையிட்டார்கள்.

அறிவிப்பாளர்: அப்துல்லாஹ் பின் உமர் (ரலி) அவர்கள், முஸ்லிம் 1802

# நோன்புப் பெருநாளின் சட்டங்கள்

2

## பெருநாள் தொழுகைக்கு முன் பேரீச்சம் பழங்களை உண்ணுதல்

அல்லாஹ்வின் தூதர் (ﷺ) அவர்கள் நோன்புப் பெருநாள் (ஈதுல் ஃபித்ர்) தினத் தில் சில பேரீச்சம் பழங்களை உண்ணாமல் (தொழுகைக்குப்) புறப்படமாட்டார்கள்.

குறிப்பு:

இந்த ஹதீஸ் இரு அறிவிப்பாளர் தொடர்களில் வந்துள்ளது. அவற்றில் ஓர் அறிவிப்பில், 'அவற்றை ஒற்றைப்படை எண்ணிக்கையில் உண்பார்கள்' என்று வந்துள்ளது.

அறிவிப்பாளர்: அனஸ் (ரலி) அவர்கள், புகாரி 953

# நோன்புப் பெருநாளின் சட்டங்கள்

3

## பெருநாள் தினத்தில் தக்பீர் கூறுதல்

குறிப்பிட்ட நாட்கள் (நோன்பில் விடுபட்டுப் போனதைப்) பூர்த்தி செய்யவும், உங்களுக்கு நேர்வழி காட்டியதற்காக அல்லாஹ்வின் மகத்துவத்தை நீங்கள் போற்றி நன்றி செலுத்துவதற்காகவுமே (அல்லாஹ் இதன் மூலம் நாடுகிறான்).

அல்குர்ஆன் 2: 185

# நோன்புப் பெருநாளின் சட்டங்கள்

4

## குத்பாவிற்கு முன்பே தொழுக வேண்டும்

நான் அல்லாஹ்வின் தூதர் (ﷺ) அவர்களுடனும் அபூபக்ர் (ரலி), உமர் (ரலி), உஸ்மான் (ரலி) ஆகியோருடனும் பெருநாள் தொழுகையில் கலந்து கொண்டுள்ளேன். அவர்கள் அனைவரும் (குத்பா) உரை நிகழ்த்துவதற்கு முன்பே தொழுபவர்களாக இருந்தனர்.

அறிவிப்பாளர்: இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள், புகாரி 962

# நோன்புப் பெருநாளின் சட்டங்கள்

5

## குத்பாவிற்கு முன்பே தொழுக வேண்டும்

நபி (ﷺ) அவர்கள் (நோன்புப் பெருநாளில்) எழுந்து முதலில் தொழுதார்கள். அதற்குப் பிறகே மக்களுக்கு உரையாற்றினார்கள்.

நபி (ﷺ) அவர்கள் உரையாற்றி முடித்ததும்

அங்கிருந்து புறப்பட்டுப் பெண்கள் பகுதிக்குச் சென்று பிலால் (ரலி) அவர்களது கைமீது சாய்ந்துகொண்டு, பெண்களுக்கு அறிவுரை பகர்ந்தார்கள். அப்போது பிலால் (ரலி) அவர்கள் தமது ஆடையொன்றை விரித்துப் பிடிக்க, அதில் பெண்கள் தர்மத்தை இட்டுக் கொண்டிருந்தனர்.

அறிவிப்பாளர்: ஜாபிர் பின் அப்தில்லாஹ் (ரலி) அவர்கள், புகாரி 961

# நோன்புப் பெருநாளின் சட்டங்கள்

6

## குத்பாவிற்கு முன்பே தொழ வேண்டும்

அல்லாஹ்வின் தூதர் (ﷺ) அவர்கள் ஹஜ்ஜுப் பெருநாளிலும் நோன்புப் பெருநாளிலும் (முதலில்) தொழுவார்கள். தொழுகையை முடித்தபிறகே உரை (குத்பா) நிகழ்த்துவார்கள்.

அறிவிப்பாளர்: அப்துல்லாஹ் பின் உமர் (ரலி) அவர்கள், புகாரி 972

# நோன்புப் பெருநாளின் சட்டங்கள் 7

## திடலில் தொழுதல்

நபி (ﷺ) அவர்கள் (பெருநாள் தொழுகைக்காகத்) தொழும் திடலுக்குப் புறப்பட்டுச் செல்வார்கள். அவர்களுக்கு முன்னால் (கைப்பிடி உள்ள) கைத்தடி எடுத்துச் செல்லப்பட்டுத் தொழும் திடலில் அவர்களுக்கு முன்னால் (தடுப்பாக) நட்டு வைக்கப்படும். அதை நோக்கி நபி (ﷺ) அவர்கள் தொழுவார்கள்.

அறிவிப்பாளர்: இப்னு உமர் (ரலி) அவர்கள், புகாரி 973

# நோன்புப் பெருநாளின் சட்டங்கள்

8-A

## பெண்களும் கலந்து கொள்ளுதல்

பெருநாளன்று (பெண்களாகிய) நாங்கள் (தொழும் திடலுக்குப்) புறப்பட்டுச் செல்ல வேண்டுமெனவும் திரையினுள் இருக்கும் குமரிப் பெண்களையும் புறப்படச் செய்ய வேண்டுமெனவும் கட்டளையிடப்பட்டிருந்தோம்.

மாதவிடாய் ஏற்பட்டுள்ள பெண்களைக்கூடப் புறப்படச் செய்ய வேண்டுமெனக் கட்டளையிடப்பட்டோம்.

பெண்கள் (தொழும் திடலுக்குச் சென்று) ஆண்களுக்குப் பின்னால் இருந்து கொண்டு ஆண்கள் தக்பீர் சொல்லும்போது அவர்களும் தக்பீர் சொல்வார்கள்.

ஆண்கள் பிரார்த்திக்கும்போது அவர்களும் பிரார்த்திப்பார்கள். அந்த நாளின் அருள் வளத்தையும் (பாவத்) தூய்மையையும் எதிர்பார்ப்பார்கள்.

அறிவிப்பாளர்: உம்மு அத்திய்யா (ரலி) அவர்கள், புகாரி 971

# நோன்புப் பெருநாளின் சட்டங்கள்

8-B

## பெண்களும் கலந்து கொள்ளுதல்

இரு பெருநாட்களில் இளம் பெண்களையும், திரைக்கு அப்பால் உள்ள பெண்களையும் புறப்படச் செய்யும்படி நபி (ﷺ) அவர்கள் எங்களுக்குக் கட்டளையிட்டார்கள். மாதவிடாய் ஏற்பட்ட பெண்கள் முஸ்லிம்களின் தொழும் இடத்தைவிட்டு ஒதுங்கியிருக்குமாறு அவர்கள் கட்டளையிட்டார்கள்.

அறிவிப்பாளர்: உம்மு அத்திய்யா (ரலி) அவர்கள், முஸ்லிம் 1613

# நோன்புப் பெருநாளின் சட்டங்கள்

8-C

## பெண்களும் கலந்து கொள்ளுதல்

அல்லாஹ்வின் தூதர் (ﷺ) அவர்கள் இளம் பெண்களையும் மாதவிடாய் ஏற்பட்டுள்ள பெண்களையும் திரைமறைவில் உள்ள பெண்களையும் நோன்புப் பெருநாள் மற்றும் ஹஜ்ஜுப் பெருநாள் ஆகிய (இரு) பெருநாட்களிலும் (தொழும் திடலுக்குப்) புறப்படச் செய்யுமாறு எங்களுக்குக் கட்டளையிட்டார்கள்.

ஆயினும், மாதவிடாய் ஏற்பட்டுள்ள பெண்கள் தொழுகையிலிருந்து ஒதுங்கியிருப்பார்கள்; நல்ல உரைகளிலும் முஸ்லிம்களின் பிரார்த்தனையிலும் பங்கெடுக்க வேண்டும் (என்றும் கட்டளையிட்டார்கள்).

அப்போது நான் ’அல்லாஹ்வின் தூதரே! எங்களில் ஒருத்தியிடம் துப்பட்டா இல்லாவிட்டால் (என்ன செய்வது)?’ என்று கேட்டேன்.

அதற்கு அல்லாஹ்வின் தூதர் (ﷺ) அவர்கள் அவளுடைய சகோதரி தமது துப்பட்டாவில் ஒன்றை அவளுக்கு இரவலாக அணிவிக்கட்டும்!’ என்று கூறினார்கள்.

அறிவிப்பாளர்: உம்மு அத்திய்யா (ரலி) அவர்கள், முஸ்லிம் 1615

# நோன்புப் பெருநாளின் சட்டங்கள்

9-A

## பெருநாள் தொழுகைக்கு பாங்கு, இகாமத் இல்லை

இப்னு அப்பாஸ் (ரலி), ஜாபிர் பின் அப்தில்லாஹ் (ரலி) ஆகியோர் கூறியதாவது.

நபி (ﷺ) அவர்களது காலத்தில்) நோன்புப் பெருநாளிலோ ஹஜ்ஜுப் பொருநாளிலோ பாங்கு சொல்லும் வழக்கம் இருக்கவில்லை.

புகாரி 960

# நோன்புப் பெருநாளின் சட்டங்கள்

9-B

## பெருநாள் தொழுகைக்கு பாங்கு, இகாமத் இல்லை

நான் அல்லாஹ்வின் தூதர் (ﷺ) அவர்களுடன் இரு பெருநாள் தொழுகைகளை ஒரு முறை, இரு முறை அல்ல (பல முறை) தொழுதிருக்கிறேன். (அவற்றில்) பாங்கும் இகாமத்தும் இருந்ததில்லை.

அறிவிப்பாளர்: ஜாபிர் பின் சமுரா (ரலி) அவர்கள், முஸ்லிம் 1991

# நோன்புப் பெருநாளின் சட்டங்கள் 10

## பெருநாள் தொழுகைக்கு முன், பின் சுன்னத்துகள் இல்லை

நபி (ﷺ) அவர்கள் நோன்புப் பெருநாளில் இரண்டு ரக்அத்கள் (மட்டுமே) தொழுதார்கள். அதற்கு முன்போ பின்போ அவர்கள் (கூடுதலாக எதையும்) தொழ வில்லை.

(உரை நிகழ்த்திய) பிறகு தம்முடன் பிலால் (ரலி) அவர்கள் இருக்க, பெண்கள் பகுதிக்கு நபி (ﷺ) அவர்கள் வந்து (அறிவுரை கூறினார்கள் (அப்போது) தர்மம் செய்யுமாறு அவர்களைப் பணித்தார்கள்.

உடனே பெண்கள் (தம்மிடம் இருந் ததை பிலால் அவர்களின் கரத்திலிருந்த துணியில்) இடலாயினர். சில பெண்கள் தம் காதணிகளையும் தம் (கழுத்தில் அணிந்திருந்த) நறுமண மாலைகளையும் இட்டனர்.

அறிவிப்பாளர்: இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள், புகாரி 964

# நோன்புப் பெருநாளின் சட்டங்கள் 11

## பெருநாளன்று நோன்பு நோற்பது கூடாது

நோன்புப் பெருநாள், ஹஜ்ஜுப் பெருநாள் ஆகிய இரு நாட்களில் நோன்பு நோற்பதை நபி (ﷺ) அவர்கள் தடுத்தார்கள்.

அறிவிப்பாளர்:அபூசயீத் (ரலி) அவர்கள், புகாரி 1991 (ஹதீஸின் ஒரு பகுதி)

# நோன்புப் பெருநாளின் சட்டங்கள்

12

## பெருநாள் தினத்தில் புத்தாடை அணிதல்

(என் தந்தை) உமர் (ரலி) அவர்கள் கடைத்தெருவில் விற்பனை செய்யப்பட்ட தடித்த பட்டு நீளங்கி ஒன்றை விலைபேச முற்பட்டார்கள்.

அதை எடுத்துக்கொண்டு அல்லாஹ்வின் தூதர் (ﷺ) அவர்களிடம் வந்து, "அல்லாஹ்வின் தூதரே! இதைத் தாங்கள் வாங்கி பெருநாளிலும், தூதுக் குழுக்கள் தங்களிடம் வரும்போதும் (அணிந்து) அலங்கரித்துக்கொள்ளலாமே!" என்று கூறினார்கள்.

அதற்கு அல்லாஹ்வின் தூதர் (ﷺ) அவர்கள், "இது (மறுமையில்) எந்தப் பேறும் இல்லாதவர்களின் (இவ்வுலக) ஆடையாகும்" என்று கூறினார்கள்.

அறிவிப்பாளர்: அப்துல்லாஹ் பின் உமர் (ரலி) அவர்கள், புகாரி 948 (ஹதீஸின் ஒரு பகுதி)

# நோன்புப் பெருநாளின் சட்டங்கள்

13

## தொழுதுவிட்டுத் திரும்பும்போது வேறு பாதையில் வருவது

பெருநாள் வந்துவிட்டால், நபி (ﷺ) அவர்கள் (ஒரு பாதையில் தொழும் திடலுக்குச் சென்றுவிட்டு) வேறு பாதையில் திரும்பி வருவார்கள்.

அறிவிப்பாளர்: ஜாபிர் பின் அப்தில்லாஹ் (ரலி) அவர்கள், புகாரி 986

# நோன்புப் பெருநாளின் சட்டங்கள்

14-A

## நபி(ﷺ) அவர்கள் பெருநாள் தொழுகையில் ஓதிய ஸூராக்கள்

’அல்லாஹ்வின் தூதர் (ﷺ) அவர்கள் பெருநாளி(ன் தொழுகையி)ல் எ(ந்த அத்தியாயத்)தை ஓதுவார்கள்?’ என்று என்னிடம் உமர் (ரலி) அவர்கள் கேட்டார்கள்.

அதற்கு நான் ’இக்தரபத்திஸ் ஸாஅத்து’ எனும் (54ஆவது) அத்தியாயத்தையும் ’காஃப் வல்குர்ஆனில் மஜீத்’ எனும் (50ஆவது) அத்தியாயத்தையும் ஓதுவார்கள்’ என்று விடையளித்தேன்.

அறிவிப்பாளர்: அபூவாக்கித் அவ்ஃப் பின் அல்ஹாரிஸ் அல்லைஸீ (ரலி) அவர்கள், முஸ்லிம் 1618

# நோன்புப் பெருநாளின் சட்டங்கள்

14-B

## நபி(ﷺ) அவர்கள் பெருநாள் தொழுகையில் ஓதிய ஸூராக்கள்

அல்லாஹ்வின் தூதர் (ﷺ) அவர்கள் இரு பெருநாள் தொழுகையிலும் ஜுமுஆவிலும் 'சப்பி ஹிஸ்ம ரப்பிகல் அஃலா' (87) மற்றும் 'ஹல் அத்தாக்க ஹதீஸுல் ஃகாஷியா' (88) ஆகிய அத்தியாயங்களை ஓதுவார்கள்.

அறிவிப்பாளர்: நுஅமான் பின் பஷீர் (ரலி) அவர்கள், முஸ்லிம் 1592

# நோன்புப் பெருநாளின் சட்டங்கள்

15

## பெருநாட்களில் பாவமில்லா (வீர) விளையாட்டுகளில் ஈடுபட அனுமதி உண்டு

அல்லாஹ்வின் மீதாணையாக! (ஒரு பெருநாள் தினத்தன்று) அல்லாஹ்வின் தூதர் (ﷺ) அவர்களது பள்ளிவாசலி(ன் வளாகத்தி)ல் அபிசீனியர்கள் ஈட்டியெறிந்து (வீர விளையாட்டு) விளையாடிக் கொண்டிருந்தனர்.

அவர்களது விளையாட்டை நான் பார்ப்பதற்காக அல்லாஹ்வின் தூதர் (ﷺ) அவர்கள் எனது அறைவாசலில் நின்றபடி தமது மேல்துண்டால் என்னை மறைத்துக்கொண்டிருந்தார்கள்.

நானாக (விளையாட்டை ரசித்துச் சலிப்புற்று)த் திரும்பும்வரை எனக்காகவே அவர்கள் நின்று கொண்டிருந்தார்கள். கேளிக்கைகள்மீது பேராவல் கொண்ட இளம்வயதுப் பெண் எவ்வளவு நேரம் வேடிக்கை பார்ப்பாள் என்பதை நீங்களே மதிப்பிட்டுக் கொள்ளுங்கள்.

அறிவிப்பாளர்: ஆயிஷா(ரலி) அவர்கள், முஸ்லிம் 1621

# நோன்புப் பெருநாளின் சட்டங்கள்

16-A

## பெருநாள் தொழுகையில் கூடுதல் தக்பீர்கள்

நபி (ﷺ) இரு பெருநாள் தொழுகைகளிலும் ஓதுவதற்கு முன் முதல் ரக்அத்தில் ஏழு தக்பீர்களும், ஓதுவதற்கு முன் இரண்டாவது ரக்அத்தில் ஐந்து தக்பீர்களும் கூறுவார்கள்.

அறிவிப்பாளர்: அம்ரிப்னு அவ்ஃபுல் முஸனி (ரலி) அவர்கள், திர்மிதி 1/166

# நோன்புப் பெருநாளின் சட்டங்கள்

16-B

## பெருநாள் தொழுகையில் கூடுதல் தக்பீர்கள்

நபி (ﷺ) அவர்கள் நோன்புப் பெருநாள் தொழுகையில் முதல் ரக்அத்தில் ஏழு தக்பீர்களும், இரண்டாவது ரக்அத்தில் ஐந்து தக்பீர்களும் கூறினார்கள்.

இரண்டு ரக்அத்துகளிலும் தக்பீர்களுக்குப் பிறகே ஓதினார்கள்.

அறிவிப்பாளர்: அப்துல்லாஹ் இப்னு அம்ர் (ரலி) அவர்கள், அபூதாவுத் 1151

# நோன்புப் பெருநாளின் சட்டங்கள்

17

## ஆறு நோன்புகள்

அல்லாஹ்வின் தூதர் (ﷺ) அவர்கள் கூறினார்கள்.

ரமலான் மாதம் நோன்பு நோற்று அதைத் தொடர்ந்து ஷவ்வால் மாதத்தில் ஆறு நோன்புகள் நோற்றவர், காலமெல்லாம் நோன்புகள் நோற்றவரைப் போன்றவராவார்.

அறிவிப்பாளர் : அபூஅய்யூப் அல் அன்சாரி (ரலி) அவர்கள், முஸ்லிம் 2159